**வத்தளை பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வத்தளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| **உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை.** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரையான விடயங்களின் பிரகாரம் காசுப்பய்ச்சல் கூற்று சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் தேறிய காசு அதிகரிப்பு பெரூபா 125,294,882 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கட்டிடக் கணக்கில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 447,220,938 மற்றும் பட்டோலையின் பிரகாரம் ரூபா 446,848,115 ஆனமையால் ரூபா 372,823 வேறுபாடு காணப்பட்டது. | 2024 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | வேறுபாடுகளைக் கண்டறிந்து சரிசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 89,536,357 நிலுவை ஆதன வரி மீதி நிதிக் கூற்றுக்களின் 85,016,426 பிரகாரம் ஆனமையால் ரூபா 4,519,931 வேறுபாடு காணப்பட்டது. | மேற்படி | மேற்படி |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1940 46 அலும் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | 67,377 ஆதனங்கள் 2008 ஆம் ஆண்டில் ஆதன வரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடொன்றுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மதிப்பீட்டை மேறகொண்டு புதிய மதிப்பீட்டின் பிரகாரம் ஆதன வரி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானம் 371 (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 643,645 ஆன 02 முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | பட்டியல்களை மீளளிப்புச் செய்வதற்காக மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபைகள் நிதி நிருவாகத்துக் குரிய கணக்கு நடவடிக்கை தொடர்பான கட்டளை | | | |
| (i) | இலக்கம் 08 | நிதிக் கூற்றுக்கள் அடுத்துவரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பபிக்க வேண்டியிருந்த | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுததல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் மீளாய்வாணடின் நிதிக் கூற்றுக்கள் 2024 மே 14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | இலக்கம் 83(ii) | ஊழியர் கடனுக்காக தனிப்பட்ட ரீதியில் முற்பணக் கணக்கு பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் பாதீட்டு முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 436,438,354 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 263,219,162 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 104,501,100 | 113,583,737 | 112,545,390 | 85,016,426 | 94,142,100 | 105,796,333 | 107,098,725 | 83,978,079 |
| (ii) | வாடகை | 10,500,000 | 9,767,188 | 10,076,078 | 8,287,644 | 5,640,000 | 11,698,138 | 11,839,872, | 8,596,534 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,840,000 | 2,227,857 | 2,227,857 | - | 3,352,399 | 2,637,349 | 2,637,349 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 407,500 | 427,594 | 427,594 | - | 765,000 | 2,518,182 | 2,518,182 | - |
| | மொத்தம் | 117,248,600 | 126,006,376 | 125,276,919 | 93,304,070 | 103,899,499 | 122,650,002 | 124,094,128 | 92,574,613 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதன வரியும் வரியும் | | |
| (i) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவைு ஆதன வரி மீதியல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 11,848,422 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 26,005,921 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 14,387,366 தொகையும், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 14,799,389 தொகையும் ஆக இருந்ததுடன் அறவிடுவதற்காக ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கைகள் ஏதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரி மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு ரூபா 83,978,079 ஆன நிலுவை ஆதன வரி மீதியில் மீளாய்வாண்டின் ரூபா 27,674,227 சேகரிக்கப்பட்டமையால் நிலுவையில் சேகரிக்கபப்ட்ட பெறுமதி 33 சதவீதம் மாத்திரம் ஆகும். | 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் காணப்பட்ட நிலுவையில் அறவீடுகள் 17 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதன வரி மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) வாடகை | | |
| (i) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு ரூபா 8,596,534 ஆன நிலுவை கடை வாடகை மீதியில் மீளாய்வாணடில் சேகிக்கப்பட்ட பெறுமதி ரூபா 2,735,759 ஆனமையால் சேகரிக்கப்பட்ட பெறுமதி 31 சதவீதம் ஆகும். | அறவிடப்படுகின்றது. | நிலுவை கடை வாடகை மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ii) காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 7,828,883 ஆன நிலுவைக் கடை வாடகை மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 213,155 தொகையும், 05 முதல் 10 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 4,132,495 தொகையும், 03 முதல் 05 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 1,142,276 தொகையும், 01 முதல் 03 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 604,713 தொகையும், ஒரு வருடத்திற்கு குறைந்த மீதி ரூபா | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கடைகளை முத்திரையிட்டு நிலுவை வாடகை மீதியை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,736,244 தொகையும் ஆக இருந்த போதிலும் கடை வாடகை அறவிடுவதற்காக கடைகளை முத்திரையிடலோ அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை இறைச்சிக் கடை வாடகை மீதியும் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 234,777 தொகையும், ஒரு வருடத்திற்கு குறைந்த மீதி ரூபா 87,268 தொகையும் ஆகும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை இறைச்சிக் கடை வாடகை மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (iv) | 03 வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை வாராந்த சந்தை வாடகை மீதி ரூபா 136,718 ஆகும். | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாராந்த சந்தை வாடகை மீதி அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு.**

**3.1. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற அறவிடவேண்டிய பெறுமதி சேர் மீதி ரூபா 1,419,445 தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | வட் வரி குறித்துதைத்த பிரகாரம் செலுத்தப்பட்டுள்ளது. | மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதியில் 05 முதல் 10 வருடங்களுக்கு இடையிலான ரூபா 157,012 தொகையும், 01 முதல் 03 வருடங்களுக்கிடையிலான ரூபா 401,838 தொகையும், ஒரு வருடத்திற்கு குறைந்த ரூபா 1,305,805 தொகையும் காணப்பட்டது. | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 02 றூட் 6.35 பேர்ச் அளவான எலகந்த சந்தைத் தொகுதி காணியின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டைப் பெற்று மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எலகந்த சந்தைத் தொகுதி காணியில் சபையின் பெயர் உள்ளடக்கப்பட்ட பெயர்ப் பதாதை பொருத்தப்படாமலிருந்ததுடன் வினைவற்றுக் காணப்பட்ட 15 கடைகளுடன் உள்ள இரண்டு மாடிகளையுடைய கட்டடம் உடைந்த நிலையில் காணப்பட்ட கட்டடத்தில் கீழ் மாடியில் கழிவுப் பொருட்கள் குவித்துவைக்கப்பட்டிருந்தது. | இதனை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | சுற்றாடலை உரிய பிரகாரம் பராமரித்து வருமானத்தை உழைக்கும் நடவடிக்கைகளிலோ அல்லது ஏனைய நடவடிக்கைகளுக்காகவோ பயன்படுத்துதல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 45 காணிகளில் 33 காணிகளுக்குரிய உரித்தை உறுதிப்படுத்தும் உரித்துறுதி இலக்கமும், 24 காணிகளுக்குரிய காணிணின் அளவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுபைக்குச் சொந்தமான காணிகளின் உரித்தை உறுதிப்படுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய அரசாங்க நிறுவனங்களிலிருந்து சபை பயன்பாட்டிற்காக கிடைக்கப்பெற்ற பெறுமதி ரூபா 42,644,520 ஆன 05 வாகனங்கள் மற்றும் இயந்திரம் என்பன சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் கையளித்தல் கடிதத்தை பூர்த்தி செய்யப்படுகின்றது. | உரித்தைக் கையேற்கப்படுவதற்கு நடவவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய இலக்கம் 18/2001 என்ற அரச நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் சேவைக்காலம் 07 இற்கும் 28 வருடங்களுக்கும் இடையிலான காலம் இருந்த 19 உத்தியோகத்தர்கள் சேவை நிலையங்களுக்கிடையே இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களின் பட்டியலொன்று உள்ளுராய்ட்சி உதவி ஆணையாளர் மற்றும் பிரதம செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ஓய்வுபெற்றுச் சென்ற, மரணமடைந்த, சேவையை விட்டுச் சென்ற 10 ஊழியர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ஊழியர் கடன் மற்றும் முற்பணம் ரூபா 1,473,756 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர்கடன் மற்றும் முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |